# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093628

1. District : மாவட்டம் திண்டுக்கல் | PS: காவல்நிலையம் ஊ.த.த பிரிவு | Year: ஆண்டு 2020 | FIR No.: மு.த.அ. எண் 05/20 | Date: நாள் 11.11.2020

2. (i) Act சட்டம்: CrPC — Sections பிரிவுகள்: 41, 102
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 7(a)
   (iii) Act சட்டம்: as amended by the PC Act 2018 — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 10.11.20 — Date to : நாள் வரை 11.11.20
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 2100 hrs — Time to : நேரம் வரை 0100 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.11.20 — Time : நேரம் 04.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம் 04.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — இரகசிய தகவலின் பேரில்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — சுமார் 25 கி.மீ வடக்கு.
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி தாலுகா அலுவலகம், வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் I. கிராஜேஸ்வரி — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் V. இருளாண்டி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1980 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் — (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திண்டுக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. திருமதி. ம.லதா, க/பெ. G. மணி, வட்டாட்சியர், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்
   2. திரு. சி. பாண்டி த/பெ. சின்னையா, வாகன ஓட்டுநர், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்
   3. திரு. ம. சேகையா சௌந்திர பாண்டி, த/பெ. மரியசெபத்து, கிராம உதவியாளர், அ.கோம்பை, அலுவலக உதவியாளர், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

10.11.2020 ஆம் தேதியன்று திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தில் முதல் தளத்தில் இயங்கி வரும் வேடசந்தூர் வருவாய் வட்டாச்சியர் அலுவலகத்தில் வைத்து வேடசந்தூர் தாலுகா பகுதிகளில் இயங்கி வரும் குவாரிகளில் இருந்து மணல் மற்றும் கல் எடுப்பு மற்றும் நடைசீட்டுகளை ஆய்வு செய்வது சம்மந்தமாகவும், வேடசந்தூர் தாலுகாவில் பணியாற்றும் நிலஅளவர்கள் தாக்கல் செய்யும் உட்பிரிவு சம்மந்தமான கோப்புகளின் மீது உத்தரவு பிறப்பிப்பதற்கும் வேடசந்தூர் வட்டாச்சியர் அலுவலக அலுவலர்கள் வேடசந்தூர் தாலுகாவில் உள்ள குவாரி உரிமம்தாரர்களிடம் இருந்தும் வேடசந்தூர் தாலுகா நில அளவர்களிடமிருந்தும் கையூட்டாக பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலை அடுத்து மதுரை ஆய்வுக்குழு அலுவலர் திரு.மு.தாஜுதீன் அவர்கள் திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு 10.11.2020ம் தேதி இரவு சுமார் 21.00மணிக்கு வேடசந்தூர் தாலுகா அலுவலக கட்டிடத்தின் கீழ்தளத்தில் தெற்கு பார்த்து இருந்த பிரதான நுழைவுவாயில் முன்பிருந்த போர்டிகோவின் கீழ்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station [signed] 11/11/20
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
11. 11. 2020 - 07.00 hrs

Name: பெயர் I. Rajeswari,
Rank: நிலை ....................No. எண் ..........
Inspector of Police,
V&AC, Dindigul.

நிறுத்தப்பட்டிருந்த வேடசந்தூர் வட்டாச்சியருக்கு ஒதுக்கப்பட்ட அரசு வாகனம் பொலிரோ எண் TN57 G 0477-ல் ஒட்டுநர் இருக்கையில் ஓட்டுநர் திரு.சி.பாண்டி, வயது.57/2020, த/பெ.சின்னையா, வாகன ஓட்டுநர், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் அவர்களும், ஓட்டுநர் இருக்கைக்கு இடது பக்க முன் இருக்கையில் வேடசந்தூர் வட்டாச்சியர் திருமதி.லதா அவர்களும், ஓட்டுநருக்கு பின் இருக்கையில் வட்டாச்சியருக்கு உதவியாக செயல்பட்டு வரும் திரு.பி.மூக்கையா சௌந்திரபாண்டியன், வயது.36/2020, த/பெ.பிச்சைமுத்து, கிராம உதவியாளர், அய்யலூர், அயல்பணி அலுவலக உதவியாளர், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் என்பவரும் அமர்ந்திருந்தனர். அப்போது ஓட்டுநர் திரு.பாண்டி அவர்கள் வாகனத்தை எடுக்க முற்பட்டு சுமார் 10 அடி வாகனத்தை இயக்கிய நிலையில் இணை ஆய்வுக்குழு அலுவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது. அப்போது ஆய்வுக்குழு அலுவலர் திரு.மு.தாஜுதீன் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு ஆய்வாளர் திருமதி.ராஜேஸ்வரி மற்றும் குழுவினர் மேற்படி வட்டாச்சியர் மற்றும் பணியாளர்களிடம் தங்களை அறிமுகம் செய்து கொண்டு திடீர் சோதனைக்கு வந்திருப்பது பற்றி தெரிவிக்கப்பட்டது. வாகனத்திற்கு வெளியே அலுவலகத்தின் முன்புறத்தில் வட்டாச்சியரை அனுப்புவதற்காக 1), திரு.ரா.சரவணக்குமார், வயது.42/2020, த/பெ.ராஜன், வேடசந்தூர் நகர் நிலஅளவையர், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் 2). திரு.வே.கிருஷ்ணன், வயது.39/2020, த/பெ.வேலுசாமி, இரவு காவலர், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் ஆகியோர் நின்றிருந்தனர். அவர்களிடமும் மேற்படி ஆய்வு பற்றி விபரம் தெரிவிக்கப்பட்டது. பின்னர் வட்டாச்சியர், வாகன ஓட்டுநர் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.பி.மூக்கையா சௌந்திரபாண்டியன் ஆகியோர்களை மேற்படி வாகனத்தில் இருந்து இறங்கச்சொல்லி பின்பு வாகனம் முழுவதும் மேற்படி அலுவலகர்கள் முன்பு சோதனை செய்யப்பட்டது. அந்த சோதனையின் போது ஓட்டுநர் இருக்கையில் இருந்த வயர் பின்னல் சீட்டிற்கும் கீழே இருந்த வெள்ளை நிற டர்க்கி டவலுக்கு கீழ் ரூ.8,000/- (2000x3, 500x4) இருந்தது. அதேபோல் ஓட்டுநர் இருக்கையின் பின்பக்கம் இருந்த சீட்டில் கருப்பு லெதர் பாக்கெட் பர்ஸ் இருந்தது. அதில் ரூ.500/-(500x1) இருந்தது. அதுபற்றி அப்போது பின் இருக்கையில் அமர்ந்திருந்த திரு.பி.மூக்கையா சௌந்திரபாண்டியனிடம் விசாரிக்க அந்த மணிபர்ஸ் தன்னுடையது என்றும், அதில் உள்ள ரூ.500/- தான்

தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக சொன்னார். அதன்படி அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதேபோல் டிரைவர் சீட்டிற்கும், வட்டாச்சியர் சீட்டிற்கும் இடையே வைக்கப்பட்டிருந்த Sri Sai Bharath Group of Institutions 2019 exclusive Diary என்ற குளோப் படம் போட்ட புளுகலர் டைரியின் ஜனவரி -26 என்ற பக்கத்தில் இருந்து ரூ.7,000/- (500x14) இருந்தது. அதுபற்றி ஆஜரில் இருந்தவர்களிடம் கேட்க ஓட்டுநர் திரு.பாண்டி அவர்கள் சென்ற 2019 பஞ்சாயத்து தேர்தலில் வாகன செலவு சம்மந்தமாக நான் ஜனவரி-01, 02, 03. 07, 12 ஆகிய தேதி உள்ள பக்கங்களில் சில கணக்குகள் மற்றும் விபரங்கள் எழுதப்பட்டுள்ளது. அதன்பிறகு அந்த டைரி வாகனத்திலேயே வைக்கப்பட்டிருந்தது. அதன்படி இன்று அந்த டைரியை வட்டாச்சியர் அவர்கள் வாகனத்தில் ஏறிய உடன் எடுத்து பார்த்து விட்டு வைத்துவிட்டார். அப்போது அவர் அதில் பணம் ஏதும் வைத்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னார். அப்போது டைரியுடன் பணம் வைக்கப்பட்டிருந்த அத்துடன் பணம் வைக்கப்பட்டிருந்த மேற்படி டைரியானது கைப்பற்றப்பட்டது, மேலும் வாகனத்தில் வட்டாச்சியர் இருக்கையின் முன்புள்ள கால் வைக்கும் இடத்தில் இருந்த பிரவுன் கலர் லெதர் பேக்கை சோதனையிட அந்த பேக்கின் பிரதான பக்கத்தின் உள்ளே இருந்த இன்னர் ஜிப் பாக்கெட்டில் இருந்து ரூ.7,500/- (2000x2, 500x7) கண்டுபிடிக்கப்பட்டது. அதேபோல் அந்த பேக்கின் மையப்பகுதி பாக்கெட்டில் தனியாக கத்தையாக ரூ.19,000/-ம் (38x500) இருந்தது. அதே போல் அந்த லெதர் பேக்கின் வெளிப்பக்கம் இருந்த சிறிய முன் ஜிப் பாக்கெட்டில் ரூ.1,500/-ம் (3x500) மற்றும் ரூ.528/- ம் (100x3, 50x2, 10x11, 5x3(Coin), 2x1, 1x1) தனித்தனியாக இருந்தது. மேற்படி லெதர் பேக்கில் இருந்து கைப்பற்றப்பட்ட ரூ.7500/-, ரூ.19,000/- ஆகியவை பற்றி வட்டாச்சியர் திருமதி.லதா அவர்களிடம் கேட்க அதற்கு அவர் தான் தனது வீட்டில் இருந்த சேமிப்பு பணத்தை எடுத்து வந்ததாகவும், ஆனால் அதற்கான ATM ரசீதோ, வங்கி சேமிப்பு கணக்கு புத்தக பதிவுகளோ மற்றும் வெளிநபர்களிடமிருந்து பெறப்பட்டதற்கான ஆதாரங்களோ எதுவும் இல்லை என்றும், கையிருப்பு பணத்தை பதிவு செய்ய அலுவலகத்தில் தனிப்பதிவேடு ஏதும் பராமரிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேற்படி கைப்பற்றப்பட்ட ரூ.7,500/-, ரூ.19,000/- சம்மந்தமாக வட்டாச்சியர் திருமதி.லதா அவர்கள் தெரிவித்த முகாந்திரம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால் அந்தப்பணம் சந்தேகத்திற்கிடமான கணக்கில் வராத பணமாக கருதி கைப்பற்றப்பட்டது. அதேபோல் லெதர் பேக்கின் முன்பக்க ஜிப்பில் தனித்தனியாக இருந்த ரூ.1,500/- பற்றியும், ரூ.528/- பற்றியும் வட்டாச்சியர் திருமதி.லதா அவர்களிடம் கேட்க, அந்த பணம் தான் கைச்செலவிற்காக கொண்டு வந்த பணம் என்றும், அது தனது சொந்த பணம் என்று சொன்னதின்பேரில் ரூ.1,500/-,

மற்றும் ரூ.528/-ம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. ``அதே போல் வாகனத்தை மேலும் சோதனை செய்ய வாகன ஓட்டுநரின் இருக்கைக்கு பின்புறம் இருந்த ஜிப் பேக்கில் ரூ.4,500/- (500x9) இருந்தது. அப்போது அலுவலகத்தின் முன்புற நின்றிருந்த 1). திரு.சரவணக்குமாரிடம் விசாரிக்க தான் இன்று உட்பிரிவு சம்மந்தமாக கோப்புகளில் வட்டாச்சியரிடம் கையொப்பம் பெறுவதற்காக வந்ததாகவும், அப்போது வட்டாச்சியர் பணியாக இருந்ததால் இரவு சுமார் 9 மணிவரை இருந்து கையொப்பம் பெற்றதாகவும், எனக்கு முன்பு வந்த சர்வேர் திரு.தினேஷ் பாரத் என்பவர் வட்டாச்சியரிடம் பணியை முடித்துவிட்டு சென்றுவிட்டதாகவும், தான் வட்டாச்சியரை வழியனுப்பவதற்காக வாசல் வரை வந்ததாகவும் தெரிவித்தார். பின்பு அவரை சோதனை செய்ய தன்னிடம் ரூ.640/- இருப்பதாகவும், அது தனது சொந்தப்பணம் என்று சொன்னதின் பேரில் அவரிடமே மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. மேலும் வாகனத்தில் கைப்பற்றப்பட்ட பணம் பற்றி தனக்கு ஏதும் தெரியாது என்றும் தெரிவித்தார். அதேபோல் அலுவலக இரவு காவலர் திரு.கிருஷ்ணனை விசாரிக்க தான் இன்று இரவு அலுவலுக்காக அலுவலகம் வந்ததாகவும், அப்போது வட்டாச்சியர் திருமதி.லதா அவர்கள் இரவு சுமார் 9 மணிவரை சர்வேயர்கள் மற்றும் வந்திருந்த நபர்களின் பணி சம்மந்தமாக பார்த்து கொண்டிருந்ததாகவும், பின்னர் அவர் கிளம்பி செல்லும் நேரத்தில் நான் அவரை வழி அனுப்வுதற்காக அலுவலகத்தின் முன்பு நின்றிருந்ததாகவும், அப்போது அதிகாரிகள் விசாரிக்க தன்னிடம் பணம் ஏதும் இல்லை என்றும், மேலும் வாகனத்தில் கைப்பற்றப்பட்ட பணம் பற்றி தனக்கு ஏதும் தெரியாது என்றும் தெரிவித்தார். அதன் பிறகு இணை ஆய்வுக்குழு அலுவலர்கள் வட்டாச்சியர் மற்றும் அலுவலர்களை அழைத்துக்கொண்டு வருவாய் வட்டாச்சியர் அலுவலகம் அமைந்துள்ள முதல்தளத்திற்கு வந்து சோதனை செய்யப்பட்டது. அந்த சோதனையின் போது வழக்கு சம்மந்தமாக பணமோ, வேறு ஆவணங்களோ கைப்பற்றப்படவில்லை. அப்போது வட்டாச்சியர் அலுவலக இன்றைய வருகைப் பதிவேடு, அலுவலக வெளிப்பணி பதிவேடும் பார்வையிடப்பட்டது. பின்னர் வட்டாச்சியர் திருமதி.லதா அவர்களிடம் கொடிநாள் வசூல் பதிவேடு மற்றும் ரசீது புத்தகம் பற்றி கேட்க, அவற்றை தலைமையிடத்து துணை தாசில்தார் திரு.ஆதிகுமார் அவர்கள் வசம் உள்ளதாகவும், கொடிநாளை பொறுத்தவரை வசூல் செய்வதை கணக்கு பராமரிப்பது போன்றவை தலைமையிடத்து துணை வட்டாச்சியரின் பொறுப்பு என்பதும், தனக்கும் கொடிநாள் வசூல் பணத்திறகும் சம்மந்தம் இல்லை என்று தெரிவித்தார். மேலும் வட்டாச்சியர் அலுவலகத்தை பொறுத்தவரை வெளிநபர்களிடமிருந்து கட்டணமாகவோ, வேறு விதமாகவோ எந்த நேரடி பணப்பரிவத்தனை செய்யப்படுவதில்லை என்று தெரிவித்தார். மேலும் மேற்படி

அரசு வாகனத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட ரூ.8,000/-, ரூ.7,000/-, ரூ.7,500/-., ரூ.19,000/- மற்றும் ரூ.4,500/- ஆக மொத்தப்பணம் ரூ.46,000/- சம்மந்தமாக வட்டாச்சியர் உட்பட ஆஜரில் இருந்து அனைத்து அலுவலர்களிடமும் கேட்க யாரும் தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்தப்பணம் உட்பிரிவு சம்மந்தமாக நிலஅளவையாளர்கள் மற்றும் குவாரி உரிமைதாரர்களிடமிருந்து கையூட்டாக பெற்றிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின்பேரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் டைரி-2019 தவிர வேறு ஆவணங்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை. இது சம்மந்தமாக சாட்சிகள் முன்னிலையில் செயல்முறை நடவடிக்கை 10.11.2020ம் தேதி இரவு 21.00 மணிமுதல் 11.11.2020ம் தேதி அதிகாலை 01.00 மணி வரை வட்டாச்சியர் அலுவலகம், வேடசந்தூரில் தயார் செய்து கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணத்துடன் நிலையம் வந்து மேற்படி வேடசந்தூர் வருவாய் வட்டாச்சியர் வாகனத்தில் ஆஜரில் இருந்த 1) திருமதி.லதா, வட்டாச்சியர் 2) திரு.சி.பாண்டி, வாகன ஓட்டுநர், 3) திரு.பி.மூக்கையா சௌந்திரபாண்டி, கிராம உதவியாளர், அ.கோம்பை, அயல்பணி அலுவலக உதவியாளர், வேடசந்தூர் ஆகியோர்கள் மீது திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்5/2020, சட்ட பிரிவுகள் 41 ,102 குவிமுச r/w 7(a) ஊழல் தடுப்புச்சட்டம் 1988 உடன் ஊழல் தடுப்பு (திருத்தப்பட்ட)சட்டம் 2018 படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல், தீடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை அறிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.46,000/- ஆகிவற்றை திண்டுக்கல் மாவட்ட தலைமை நீதித்துறை நடுவர் மறறும் சிறப்பு நீதிபதி அவர்களுக்கு அனுப்பி வைப்பப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் நகலை சம்மந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

11/11/2020

Inspector of Police
Vigilance and Anti-Corruption
DINDIGUL